# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2017 சனவரி

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

*வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் வினாப்பத்திரத்திற்கு அதிகமானவர்கள் திருப்திகரமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில வினாக்களுக்கு விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் பின்வரும் தவறுகளை விட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.*

*சிலவற்றுக்கான காரணங்களாக பின்வரும் அவதானிப்புகள் புள்ளியிடும் பரீட்சகர்களால் பதிவு செய்யப்பட்டிருந்தன :*

### <u>பகுதி A</u>

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** – இவ்வினா 40 புள்ளிகளுக்காக 20 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.

பரந்த பாடத்திட்டத்தை உள்ளடக்கிய இவ்வினாவின் ஊடாக மொத்தப் புள்ளிகளில் 40% இனைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வினாக்கள் பொருளியலின் அடிப்படைக் கோட்பாடுகளின் அடிப்படையில் பொருத்தமான அளவைப் பேணியவாறு அமைக்கப்பட்டிருந்தன.

அதிகளவான பரீட்சார்த்திகள் தெரிவொன்றின் ஊடாக சரியான விடைகளைத் தெரிவுசெய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த வினாக்கள், தரப்பட்ட கூற்று சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடும் வினாக்கள் மற்றும் விடயப் பரப்பு பற்றிய பொது அறிவுடன் தொடர்புடைய வினாக்கள் ஆகியவற்றுக்கு விடையளிப்பதில் திருப்திகரமான செயலாற்றுகை மட்டத்தினை அடைந்திருந்தனர்.

எவ்வாறாயினும், புள்ளியிடும் பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட வினாக்கள் தொடர்பான பரீட்சார்த்திகளின் குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன :

**<u>வினா இல. 1.1</u>**

பல பரீட்சார்த்திகள் விலைக்கும் நிரம்பல் கணியத்திற்குமிடையிலான தொடர்புடைமையான நிரம்பல் விதியினைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாத அல்லது வாசிக்கும்போது வினாவில் கவனத்தைச் செலுத்தாத காரணத்தினால் சில பரீட்சார்த்திகள் ‘‘நிரம்பல் கணிய மாற்றத்திற்கும் கேள்விக் கணிய மாற்றத்திற்கும்’’ இடையிலான தொடர்பு என்ற தவறான விடையினைத் தெரிவுசெய்திருந்தனர்.

**<u>வினா இல. 1.2</u>**

பல பரீட்சார்த்திகள், நாட்டினது உற்பத்திச் சாத்திய வளையியில் இருந்த புள்ளி $x$ ஆனது வளங்களின் நிறைதொழிலைக் குறிக்கிறது என்பதைச் சரியாக இனங்கண்டிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள், ‘‘எதிர்கால பொருளாதார வளர்ச்சியின் ஒரு விரைவு வீதம்’’ எனக் குறிப்பிட்டிருந்த விடை இல. (4) இனைத் தெரிவுசெய்திருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் உற்பத்திச் சாத்திய வளையி தொடர்பான தங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**<u>வினா இல. 1.3</u>**

அதிகமான பரீட்சார்த்திகள் நுகர்வோர் மிகையாக ரூ. 250/- ஐச் சரியாகத் தெரிவுசெய்திருந்தனர். சிலர், நுகர்வோர் மிகை ரூ.500/- எனப் குறிப்பிட்டிருந்த விடை இல. (2) ஐப் பிழையாகத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.4**

குறுக்கு விலை நெகிழ்ச்சி 0.25 ஆக இருந்தபோதிலும், அது +0.25 ஆக இருத்தல் வேண்டும். ஆயினும் – 0.25 இனை சரியான விடையாகத் தெரிவுசெய்திருந்த பரீட்சார்த்திகளைக் காணக் கூடியதாக இருந்தது. பரீட்சார்த்திகள் இவ்வகை வினாக்களில் (+) / (-) குறியீடுகள் மீது அதிக அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும். குறுக்கு விலை நெகிழ்ச்சி வினாவிலுள்ள தொகுதி எண் மற்றும் பகுதி எண் ஆகியவற்றை மாற்றி எழுதியதன் காரணமாக, குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் தவறான விடையான விடை இல. (3) இனைச் சரியான விடையென எண்ணி (8/2 = +4.0) அதனைத் தெரிவுசெய்திருந்தனர்.

**வினா இல. 1.5**

பரீட்சார்த்திகள் வினாவைச் சரியான முறையில் முழுமையாக வாசிக்காத காரணத்தால் பிழையான விடைகளைத் தெரிவுசெய்திருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் விடை இல. (4) இல் தரப்பட்ட சரியான விடையான ‘‘மேலுள்ள அனைத்தும்’’ என்பதைத் தெரிவு செய்வதில் தோல்வி கண்டிருந்தனர். பல பரீட்சார்த்திகள் விடை இல. (1) இல் தரப்பட்ட ‘‘அரசாங்கத்திற்கான வரி வருமானத்தைப் பிறப்பிப்பது’’ என்ற விடையைத் தெரிவுசெய்திருந்ததன் மூலம் புள்ளிகளை இழந்திருந்தனர்.

**வினா இல. 1.6**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறான விடையான விடை இல. (1) இல் வழங்கப்பட்டிருந்த ‘‘நுகர்விலுள்ள போட்டித்தன்மை’’ என்பதை பொதுப் பொருட்களின் பண்பியல்பொன்றாகத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.7**

சில பரீட்சார்த்திகள், அரசாங்கப் பாதீட்டின் பிரதான நோக்கம் அல்லாதது எது என்பதற்குப் பதிலாக ‘‘பிரதான நோக்கம் எது’’ என்றவாறு விளங்கிக்கொண்டிருந்தனர். இதன் விளைவாக பிழையான விடைகளைத் தெரிவுசெய்திருந்தனர். பரீட்சார்த்திகள் பல்தேர்வு வினாக்களில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**வினா இல. 1.8**

பொருளியலுடன் தொடர்புடைய புள்ளிவிபரத் தரவுகளை படிக்காததன் காரணமாக அதிகமான பரீட்சார்த்திகளின் விடைகள் தவறானவையாகக் காணப்பட்டன. பொருளியில் பற்றிக் கற்கும்போது பரீட்சார்த்திகள் மத்திய வங்கி அறிக்கைகளைப் பார்வையிடுவது கட்டாயமானதாகும். இது விடயப் பரப்பின் நடைமுறைப் பாவனை பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்கு மிகப்பெரியளவில் உதவி புரியும்.

**வினா இல. 1.9**

அதிகளவான பரீட்சார்த்திகள், தேசிய வருமான சுற்றோட்டப் பாய்ச்சலிலிருந்தான ஒரு வெளிப் பாய்வாக சேமிப்பு காணப்படுகிறது என்பதை விளங்கிக்கொள்ளும் திறனைக் கொண்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வெளிப்பாய்வு மற்றும் உட்பாய்வினை குழப்பியடித்த காரணத்தால் முதலீடுகள் என்ற தவறான விடையினை வழங்கியிருந்தனர்.

**வினா இல. 1.10**

அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள், பொருளாதாரம் அதன் மூலதன இருப்பினை அதிகரிக்கும்போது பொருளாதாரமொன்றின் மூலதனத் திரட்டல் நிகழ்கிறது என்ற விடையைச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

இல. **1.11** முதல் **1.15** வரையான வினாக்களுக்கு சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடுமாறு தேவைப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், அதிகளவான பரீட்சார்த்திகள் சரி என்பதற்கு "√" எனவும் தவறு என்பதற்கு "X" எனவும் குறியீடுகளைப் பயன்படுத்தியிருந்தனர். பரீட்சார்த்திகள் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி வினாக்களுக்கு விடையளிப்பதில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

**<u>வினா இல. 1.11</u>**

நிரம்பலில் மாற்றமின்றி பண்டமொன்றிற்கான கேள்வியில் ஏற்படும் ஒரு அதிகரிப்பானது அப்பண்டத்தின் சமநிலை விலை மற்றும் சமநிலைக் கணியம் ஆகிய இரண்டிலும் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்துகிறது. என்பது உண்மையான ஒரு கூற்று என்றபோதிலும், சில பரீட்சார்த்திகள் அது தவறான கூற்று எனக் குறிப்பிட்டிருந்தனர். பரீட்சார்த்திகள் கேள்வி மற்றும் நிரம்பலுக்கேற்ப எவ்வாறு சமநிலை விலை மற்றும் கணியம் மாற்றமடைகிறது என்பது பற்றிய தெளிவான விளக்கத்தினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

**<u>வினா இல. 1.12</u>**

சிலருரிமையின் கீழ் சந்தையில் அதிக எண்ணிக்கையிலான உற்பத்தியாளர்களும் / விற்பனை யாளர்களும் இருக்கின்றனர் என்பது பிழையான கூற்றாக இருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் இதனை நிறைபோட்டியுடன் குழப்பியடித்ததன் காரணமாக இக்கூற்று ''சரியானது'' எனக் குறிப்பிட்டிருந்த காரணத்தால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

**<u>வினா இல. 1.13</u>**

இவ்வினாவுக்கான சரியான விடை ''சரியானது'' என்றபோதிலும், அது தவறானது எனக் குறிப்பிட்டிருந்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். பரீட்சார்த்திகள், சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையீடு செய்வதற்கான பிரதான காரணம் சந்தைத் தோல்வியைச் சரிசெய்வதே என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**<u>வினா இல. 1.14</u>**

நிலையான நாணயமாற்று வீதத்தை நிர்ணயிப்பதுடன் தொடர்புடைய தவறான கூற்றாக இது இருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் இது சரியானது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**<u>வினா இல. 1.15</u>**

ஒரு நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியுடன் தொடர்புடைய இக்கூற்று தவறானதாக இருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் இது சரியான கூற்று எனக் குறிப்பிட்டிருந்தனர். நிலைபேறான அபிவிருத்தியை அடையும் பொருட்டு பொருளாதார, சமூக மற்றும் சூழல்சார்ந்த துறைகள் என சகலவற்றிலும் சமாந்தரமான வளர்ச்சி ஒன்று இருத்தல் வேண்டும் என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**<u>வினா இல. 1.16</u>**

அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையாக ''பாவனையை'' என்பதை இனங்கண்டிருந்தனர். ஆனால் வினாவைச் சரியாக வாசித்திராத ஒரு சில பரீட்சார்த்திகள் விடையாக ''இலாபத்தை'' என்பதை தெரிவுசெய்திருந்ததால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

**<u>வினா இல. 1.17</u>**

சில பரீட்சார்த்திகள் குறைந்தபட்ச விலைகள் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கானது எனப் பிழையாக விளங்கிக்கொண்டிருந்தனர். எவ்வாறாயினும் அதிகளவான பரீட்சார்த்திகள் ''கீழ் எல்லை விலை'' என்பது உற்பத்தியாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது என்பதைச் சரியாக விளங்கிக் கொண்டிருந்தனர்.

**<u>வினா இல. 1.18</u>**

இறைவரிக் கொள்கை என்பது அரசாங்க நிதிக்கொள்கை என்ற விடயத்தை சில பரீட்சார்த்திகள் புறக்கணித்திருந்த காரணத்தால் அவர்கள் ''நாணயக் கொள்கை'' எனக் குறிப்பிட்டிருந்தனர். இதனால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

**<u>வினா இல. 1.19</u>**

மற்றுமொரு நாட்டினை விட ஒரு நாட்டினால் குறைந்த சந்தர்ப்பச் செலவொன்றில் பண்டமொன்றை உற்பத்திசெய்ய முடிவது தனி அனுகூலம் எனச் சில பரீட்சார்த்திகளால் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. சரியான விடை ஒப்பீட்டு அனுகூலம் என்பதாகும்.

**<u>வினா இல. 1.20</u>**

சில பரீட்சார்த்திகள் ''வெளியீட்டு அதிகரிப்பு'' என்ற பதம் தொடர்பில் பிழையான அவதானத்தைச் செலுத்தியதன் காரணமாக ''அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு'' என்னும் விடையை குறிப்பிட்டிருந்தனர். இவ்வினாவுக்கான விடை ''குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு'' என்பதாகும். ஏனெனில் சகல உள்ளீடுகளும் அதிகரிப்பதற்கு எதிராக ஒரு சிறியளவு விகிதத்திலேயே வெளியீடு அதிகரிப்பதனாலாகும்.

## <u>பகுதி B</u>

இப்பகுதி ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 4 வினாக்களைக் கொண்டிருந்தது.

### வினா இல. 02

**(a)** (i) சில பரீட்சார்த்திகள் பொருளாதார வளங்கள் பற்றி விவரமாக விளக்கியிருந்தனர். ஆனால் இவ்வினாவில் அவற்றைப் பட்டியலிட மாத்திரமே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பெரும்பாலானவர்கள் திருப்திகரமான முறையில் பிரதான பொருளாதார வளங்களைப் பட்டியலிட்டிருந்தனர்.

(ii) அதிகளவான பரீட்சார்த்திகள் சந்தர்ப்பச் செலவு பற்றிய கோட்பாட்டினைச் சரியாக விபரித்திருந்தனர். அவர்களில் சிலர் கோட்பாட்டைச் சரியாக விபரித்திருந்தபோதிலும் சரியான உதாரணம் ஒன்றை வழங்குவதற்குத் தவறியிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் கோட்பாட்டை விபரிக்கும்போது குறிப்பிட்ட சந்தர்ப்பச் செலவொன்றைத் தெரிவுசெய்வதில் முன்பிருந்த அடுத்த சிறந்த மாற்றுப் பெறுமதி என்ற சரியான விடைக்குப் பதிலாக முன்பிருந்த சகல மாற்றுப் பெறுமதி என்ற பிழையான விடையை வழங்கியிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் உண்மையான சந்தைப் பொருளாதார முறைமையின் பண்பியல்புகளைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தனர். ஆயினும் சிறு தொகைப் பரீட்சார்த்திகள் சந்தைப் பொருளாதார முறைமைக்குப் பதிலாக நிறைபோட்டியின் பண்பியல்புகளை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் 5 பண்பியல்புகளை எழுதுவதற்குப் பதிலாக 3 அல்லது 4 இனை மாத்திரமே எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகள் இவ்வகையான வினாக்களில் விசேடமாக எதன் பண்பியல்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்படுகின்றன என்பதை விளங்கிக் கொண்டு அதனைக் குறிப்பிடுதல் போதுமானது என்பதுடன் அதனை விபரிப்பது தேவையற்ற ஒன்றாகும்.

## வினா இல. 03

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் இலங்கையின் நிதி முறைமையில் உள்ள நிறுவகங்களைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். ஆனால் குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் வர்த்தக வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் பெயர்களைக் குறிப்பிட்டதன் காரணமாக புள்ளிகளை இழந்திருந்தனர்.

**(b)** (i) பெரும்பாலான பரீட்சார்த்திகளால் ''நாணயக் கொள்கை'' என்பதைச் சரியாக வரைவிலக்கணப்படுத்துவதற்கு இயலாமற் போயிருந்தது. சில பரீட்சார்த்திகள் நாணயக் கொள்கை மற்றும் அரசாங்க நாணயக் கொள்கை ஆகியவற்றை குழப்பியடித்திருந்தனர். AAT இனால் வெளியிடப்பட்ட சுய கற்றல் பாடப் புத்தகத்தில் இது தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், பரீட்சார்த்திகள் அப்புத்தகத்தை முறையாகப் பார்வையிடவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

(ii) சில பரீட்சார்த்திகள் நாணயக் கொள்கையின் கருவிகளை சரியாகப் பட்டியலிட்டிருந்தனர். ஆயினும் நாணயக் கொள்கையைச் சரியாக அடையாளங் காணத் தவறியிருந்தவர்கள் இதனையும் சரியாகச் செய்திருக்கவில்லை.

## வினா இல. 04

**(a)** ''பண நிரம்பல்'' பற்றி விபரிப்பதற்குத் தேவையான சகல விடயங்களையும் ஒன்றுசேர்ப்பதற்குத் தவறியிருந்த காரணத்தால் அதிகளவான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற முடியாமற் போயிருந்தது. பண நிரம்பலானது இலங்கை மத்திய வங்கியால் கட்டுப்படுத்தப்படுவதுடன் ஏனைய நிதி நிறுவனங்களுடன் இடைவினையுறுகின்றது என்ற உண்மையைப் பல பரீட்சார்த்திகள் சுட்டிக்காட்டியிருக்கவில்லை.

**(b)** (i) இப்பகுதி பணவீக்கத்துடன் தொடர்புபட்டதாகும். இதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் குறைந்தளவு மட்டத்திலேயே காணப்பட்டன. சில பரீட்சார்த்திகள் கேள்வி அதிகரிப்புக்கான காரணங்கள், கேள்வி வளையி இடமாறுவதற்கான காரணங்கள், நிரம்பல் அதிகரிப்பதற்கான காரணங்கள் போன்ற விடைகளை எழுதியிருந்ததன் காரணமாக புள்ளிகளை இழந்திருந்தனர்.

(ii) பணவீக்க வீதம் அதிகரிப்பதன் காரணமாக இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் பற்றிக் கேட்டதற்கு, சில பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்திருந்தனர். சிலர் ஒரே விடையினை பல்வேறு வடிவங்களில் மீண்டும் மீண்டும் வழங்கியிருந்த காரணத்தால் முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள், பணவீக்க வீத அதிகரிப்பு காரணமாக இறக்குமதி அதிகரிக்கும் என எழுதுவதற்குப் பதிலாக இறக்குமதி குறைவடையும் எனத் தவறாக எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகள் பொருளியல் கோட்பாடுகள் மற்றும் தத்துவங்கள் தொடர்பான நடைமுறை அறிவைப் பெற்றுக்கொள்வதற்குப் பெருமுயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.

## வினா இல. 05

**(a)** (i) சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடும்போது, நிகர நேரில் வரிகளுக்கு மேலதிகமாக ஏற்றுமதிகளைச் சேர்ப்பதன் மூலமான செம்மையாக்கங்களில் பிழையான விடைகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், சில பரீட்சார்த்திகள் வெளிநாட்டிலிருந்தான நிகரக் காரணி வருமானத்தையும் செம்மையாக்கம் செய்திருந்தனர். அத்தகைய பரீட்சார்த்திகளின் விடைகள் சம்பந்தமற்ற செம்மையாக்கங்கள் காரணமாக பிழைத்திருந்தன. நேரில் வரிகளைச் சேர்த்திருந்த போதிலும் மானியங்களைக் கழித்திராத காரணத்தினால் சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைச் சில பரீட்சார்த்திகளால் கணிக்க முடியவில்லை.

(ii) சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும்போது, வெளிநாட்டிலிருந்தான நிகர காரணி வருமானத்திற்கு மேலதிகமாக ஏற்றுமதிகள் மற்றும் மூலதனத் தேய்மானம் ஆகியவற்றுக்கான செம்மையாக்கங்கள் பிழையாகச் செய்யப்பட்டிருந்தன.

(iii) நிகர தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும்போது, மூலதனத் தேய்மானத்துடன் தொடர்புடைய செம்மையாக்கங்கள் சரியாகச் செய்யப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் சரியான விடையைப் பெற்றுக்கொள்ளவில்லை, ஏனெனில் மேலே (i) மற்றும் (ii) இற்கான கணிப்பீடுகள் பிழையாக இருந்தமை ஆகும்.

மொத்தத்தில், குறைந்தளவான பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி (i), (ii), (iii) ஆகியவற்றுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** அதிகளவிலான பரீட்சார்த்திகள் பிரதான பேரினப் பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுவதில் திருப்திகரமான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பிரதான பேரினப் பொருளாதார நோக்கங்களை எழுதுவதற்குப் பதிலாக அரசாங்கப் பாதீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய உப விடயங்களை எழுதியிருந்ததன் காரணமாக புள்ளிகளை இழந்திருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06** – இது 20 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவாகும்.

**(a)** (i) மாறுகின்ற மற்றும் நிலையான காரணிகளுடன் தொடர்புபடுத்தி ''குறுங்கால ஓட்டம்'' மற்றும் ''நீண்டகால ஓட்டம்'' என்பவற்றைச் சில பரீட்சார்த்திகள் சரியாக வரைவிலக் கணப்படுத்தியிருந்த போதிலும், வேறு சில பரீட்சார்த்திகள் குறுங்கால ஓட்டம் என்பது ஒரு வருடத்திற்குக் குறைவானது எனவும் நீண்டகால ஓட்டம் என்பது ஒரு வருடத்திற்கு மேற்பட்டது எனவும் பிழையாக வரைவிலக்கணப்படுத்தியிருந்தனர்.

(ii) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வரைபைச் சரியாகப் பூர்த்தி செய்திருக்கவில்லை. குறித்த விலை, MR = MC, P = AR இல் இலாபம் உச்சமாகும் புள்ளி ஆகியன அடையாளங் காணப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் அச்சுக்கள் மற்றும் வளையிகளுக்கு பெயரிட மறந்திருந்தனர்.

**(b)** (i) இங்கு நிரம்பல் மற்றும் கேள்விச் சமன்பாடுகள் வழங்கப்பட்டு பண்டமொன்றின் சமநிலை விலையைக் கணிக்குமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (i) இற்கான சமநிலை விலையினைச் சரியாகக் கணித்திருந்தனர். அவர்களில் சிலர் எண்களுக்கு (+) / (-) குறிகளைப் பயன்படுத்துவதில் எண்கணிதப் பிழை விட்டிருந்தனர்.

(ii) சமநிலைக் கணியத்தைக் கணிக்கும்போது, சில பரீட்சார்த்திகள் சமநிலை விலை மற்றும் கணிதச் செய்கைகளைப் பிரதியீடு செய்வதில் தவறுவிட்டிருந்தனர். சூத்திரங்களில் பிரதியீடு செய்வதன் மூலமான இவ்வகைக் கணிப்பீடுகள் சரியாக முயற்சிக்கப்படுவதை பரீட்சார்த்திகள் உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (i) , பகுதி (ii) இற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(B)** பல பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். இது முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இலகுவான வினாவாகும். சில பரீட்சார்த்திகள் சரியாகவும் தெளிவாகவும் விபரிக்காததன் காரணமாக முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை. அவர்கள் பொது அறிவிலிருந்து பெற்றுக்கொண்டிருந்த உண்மைகளை வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

\- - -

## பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்றுத் தெளிவதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.
3. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
4. விசேடமாகச் சுய கற்றல் உரைகள், புத்தகங்கள், கையேடுகள், கடிதங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புபட்ட ஏனையவைகளை கற்கவும்.
5. வரைபடங்களைச் சரியாகப் பெயரிட்டு விபரிக்கவும்.
6. விடையெழுதும்போது அடிப்படை கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங் காணப்தற்கும் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களைக் கட்டியெழுப்பவும்.
7. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடங்களில் ஏற்றவாறு இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
8. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.
9. கடந்தகால வினாப்பத்திரங்களையும் விடைகளையும் கற்பதன் மூலம் உங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.
10. பொருளியல் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் அதனுடன் தொடர் புடையவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.
11. நேர முகாமைத்துவம் முக்கியமானது.
12. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் சரியான இடங்களில் எழுதப் பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
13. முன்னாயத்தத்துடனும் இயலுமான புள்ளிகளைப் பெறுகின்ற எதிர்பார்ப்பிலும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -